தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### தமிழகத்தில் 8 இடங்களில் 100 டிகிரி வெயில்

**சென்னை,**

தமிழகத்தில் 8 இடங்களில் புதன்கிழமை (ஏப்.2) 100 டிகிரிக்கும் அதிகமாக வெயில் சுட்டெரித்தது. மாநிலத்திலேயே அதிகபட்சமாக சேலத்தில் 105 டிகிரியும் குறைந்தபட்சமாக கொடைக்கானலில் 71 டிகிரி வெயிலும் பதிவானது. தருமபுரி, கரூர் பரமத்தி, வேலூர், பாளையங்கோட்டை, திருப்பத்தூர் (வேலூர்), திருச்சி, மதுரை உள்ளிட்ட இடங்களிலும் 100 டிகிரிக்கும் அதிகமான வெயில் இருந்தது. சென்னையைப் பொருத்தவரை 96 டிகிரி வெயில் பதிவானது. வளிமண்டல மேலடுக்கில் ஏற்பட்டுள்ள சுழற்சி காரணமாக தென் தமிழகத்தின் சில இடங்களில் வியாழக்கிழமை (ஏப்.3) மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை முன்னறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதன்கிழமை பதிவான வெயில் அளவு (டிகிரி ஃபாரன்ஹீட்டில்):

சேலம் 105

கரூர் பரமத்தி, திருச்சி, திருப்பத்தூர் (வேலூர்) 104

வேலூர், தருமபுரி, மதுரை 103

பாளையங்கோட்டை 101

சென்னை 96

கொடைக்கானல் 71

### அவிநாசியில் ரூ. 85 லட்சம் பருத்தி ஏலம்

**அவிநாசி,**

அவிநாசி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க வளாகத்தில் புதன்கிழமை நடைபெற்ற பருத்தி ஏலத்தில் ரூ. 85 லட்சத்திற்கு ஏலம் நடைபெற்றது

ஏ.சி.எம்.எஸ். ஏல மையத்தில் நடைபெற்ற இந்த ஏலத்துக்கு 4,300 பருத்தி மூட்டைகள் கொண்டு வரப்பட்டன. பருத்தி அறுவடை சீசன் முடிந்து விட்டதால் சென்ற வாரத்தைவிட 1,200 மூட்டைகள் பருத்தி வரத்து குறைந்திருந்தன.

குவிண்டால் ஒன்றுக்கு, டி.சி.எச். ரகப்பருத்தி ரூ. 5,800 முதல் ரூ. 6,300 வரையிலும், ஆர்.சி.எச். ரகப்பருத்தி ரூ. 4,800 முதல் ரூ. 5,300 வரையிலும், மட்டரகப் பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 2,500 முதல் ரூ. 3,000 வரையிலும் ஏலம் போனது. எல்.ஆர்.ஏ. ரகப்பருத்தி வரத்து இல்லை. மொத்தம் ரூ. 85 லட்சத்திற்கு பருத்தி ஏலம் நடைபெற்றது. ஆர்.சி.எச். ரகப்பருத்தி குவிண்டாலுக்கு ரூ. 70 வரை விலை அதிகரித்தது. ஏலத்தில், அன்னூர், கோபி, நீச்சாம்பாளையம், குன்னத்தூர், செங்கப்பள்ளி, சேலம், திருப்பத்தூர், ஆத்தூர், மேட்டூர், தருமபுரி, பொம்மிடிப்பூண்டி, அந்தியூர், குண்டடம், கிணத்துக்கடவு ஆகிய பகுதிகளிலிருந்து 450 பருத்தி விவசாயிகளும், 15 பருத்தி வியாபாரிகளும் பங்கேற்றனர்.

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 52.73 அடி

**ஈரோடு,**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் புதன்கிழமை நிலவரப்படி 52.73 அடியாக இருந்தது. அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 623 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 150 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 5.12 டி.எம்.சி.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## வெயிலின் தாக்கம்: கால்நடைகளுக்கு நோய் அபாயம்

**திண்டுக்கல்**: தமிழகத்தில் வெயிலின் தாக்கம் அதிகரித்து வருவதால் கால்நடைகளுக்கு கோமாரி மற்றும் சப்பை நோய் தாக்குதல் மீண்டும் அதிகரித்து வருகிறது. இவற்றை தடுப்பதற்கு கால்நடை ஆய்வாளர்கள் பற்றாக்குறையாக

இருப்பதால் கால்நடைத்துறை அதிகாரிகள் திணறி வருகின்றனர். தமிழகத்தில் இரண்டு ஆண்டுகளாக போதிய மழையில்லை. இதனால் அணைகள், குளங்கள், கண்மாய்கள், ஏரிகளில் தண்ணீரின்றி வறண்டு காணப்படுகிறது. தொடர்ந்து மழையில்லாததால், மேய்ச்சல் நிலங்களில் புல் , பூண்டுகளும் பட்டுபோய்விட்டது. பல பகுதிகளில் கால்நடைகளுக்கு தீவன பற்றாக்குறையும் உள்ளது. இதனால் கால்நடை வளர்ப்போர், தற்போது மாடுகளை அடிமாட்டிற்கு விற்கும் நிலைக்கு சென்றுள்ளனர். சரியான தீவனம், குடிநீர் கிடைக்காததால் கால்நடைகளின் பால் உற்பத்தி மிகவும் குறைந்து விட்டது. தமிழகத்தில் வெயில் கொடுமை நாளுக்கு நாள் அதிகமாகி வருவதால், கால்நடைகளுக்கு ஏற்படும் கோமாரி, சப்பை நோய் தாக்குதலும் அதிகமாகி வருகிறது. ஏற்கனவே, கோமாரி நோய் தாக்குதலில் மாடுகள் இறந்த நிலையில் நோய்கள் மீண்டும் பரவுவது அதிகாரிகளை அதிர்ச்சியடைய செய்துள்ளது. நோய் தாக்குதலுக்குண்டான மாடுகளை கண்டறிய கால்நடை ஆய்வாளர்கள் போதிய எண்ணிக்கையில் இல்லை. இது குறித்து கால்நடைத்துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது: கால்நடைகள் அனைத்திற்கும் தடுப்பூசி போடப்பட்டுள்ளது. நோய்கள் பரவுவதற்கும், தாக்குவதற்கும் வாய்ப்பில்லை. இதையும் மீறி நோய் தாக்குதல் ஏற்பட்டால் கண்காணித்து சிகிச்சைஅளிக்கப்படும், என்றார்.

## மரக்காணம் பகுதியில் உளுந்து பயிரிட விவசாயிகள் ஆர்வம்

**மரக்காணம்**: மரக்காணம் ஒன்றியத்தில் சம்பா, குறுவை என ஆண்டுக்கு இரு போகம் பயிரிடுவர். அதே சமயம் குறுகிய காலத்தில் அதிக லாபம் தரும் மாற்று பயிர்கள் செய்வதில் சில விவசாயிகள் ஈடுபடுகின்றனர். தற்போது புதுப்பாக்கம்,கே.என்.பாளையம், திருக்கனூர், நடுக்குப்பம், கந்தாடு, ஆத்திக்குப்பம், வண்டிப்பாளையம், கிளாப்பாக்கம், கோட்டிக்கப்பம் கிராமங்களில் விவசாயிகள் மானாவாரியாக உளுந்து பயிரிட்டுள்ளனர். குறைந்த நீர் ஆதாரம், குறைந்த முதலீடு, அதிக லாபம் உள்ள உளுந்து பயிரிடுவதில் விவசாயிகளிடம் ஆர்வம் அதிகரித்து வருகிறது. நெல் அறுவடை முடிந்த நிலத்தை தரிசாக போடுவதை காட்டிலும் இது போன்ற மாற்று விவசாயத்தில் ஈடுபட மற்ற விவசாயிகளும் ஆர்வம் காட்டவேண்டும்.

## பாசனத்துக்கு உயிர் நீர் திறப்பு விவசாயிகள் சங்கம் வரவேற்பு

**ஈரோடு**: கீழ்பவானி பாசனத்துக்கு நேற்று முதல், பவானிசாகரில் உயிர் நீர் திறக்கப்பட்டது. இதுகுறித்து, தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின், ஈரோடு மாவட்ட தலைவர் பெரியசாமி கூறியதாவது: கீழ்பவானி பாசனப்பகுதிக்கு, இரண்டாம் முறை பாசனத் துக்கு, மூன்று போகங்களாக தண்ணீர் கிடைக்கவில்லை. கடுமையான வறட்சியால் உயிர்நீர் கேட்டு தமிழக அரசுக்கு கோரிக்கை வைத்திருந்தோம். அணையில் போதிய தண்ணீர் இல்லாததால், விவசாயிகளின் நலன் கருதி, 15 நாள் சிறப்பு நனைப்புக்காக, இரண்டாம் முறை பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விடுவதற்கு, பொதுப்பணித்துறை பரிந்துரை செய்துள்ளது.

இதன்படி, தமிழக அரசு இன்று (நேற்று) முதல், 500 கனஅடியும், படிப்படியாக, 2,100 கனஅடி வரை தண்ணீர் திறந்து விட அனுமதி வழங்கி உள்ளது. இதன் மூலம், வறட்சியின் தாக்கம் குறையும். குடிநீர் பிரச்னையை தீர்க்க, இந்த தண்ணீர் உதவும். பாசனப்பகுதியில் உள்ள தென்னை மரங்களை காப்பாற்ற, இந்த தண்ணீர் பயனுள்ளதாக இரு க்கும். இத்தண்ணீர் மூல ம், 1.07 லட்சம் ஏக்கர் நிலங்கள் பயன்பெறும். தண்ணீர் திறப்புக்கு காரணமான, தமிழக அரசுக்கு நன்றி தெரிவிக்கிறோம், என்றார்.

## கோவில், தேர்தல் விழாக்களால் தக்காளி விலை கிடு, கிடு உயர்வு

**ஈரோடு**: தேவை அதிகரித்துள்ள நிலையில், வரத்து குறைந்து இருப்பதால், தக்காளி விலை உயர்ந்துள்ளது. ஈரோடு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும், கோவில் விழாக்கள் நடந்து வருகிறது. இதையொட்டி கோவில் நிர்வாகம் சார்பில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது. பெரும்பாலும் அன்னதானத்தில், தக்காளி சாதமே பிரதானமாக உள்ளது. அதுபோல், தேர்தல் பிரச்சார களம் சூடுபிடித்துள்ளது, பல்வேறு கட்சி வேட்பாளர்களும் செயல்வீரர்கள் கூட்டம், பிரச்சாரம் என சுழன்று வருகின்றனர். இதில் கட்சியினருக்கு பெரும்பாலும் "பொட்டலமாக' தக்காளி சாதமே வழங்கப்படுகிறது. கோடையின் தாக்கத்தால் காய்கறிகளின் வரத்து குறைந்துள்ளது. இதனால் அவற்றின் விலை அதிகரித்துள்ளது. மக்களின் தேவையை பூர்த்தி செய்வதாக, தக்காளி உள்ளது.

கடந்த, 30ம் தேதி வரை கிலோ, எட்டு முதல், பத்து ரூபாய் வரையிலான விலையில், தக்காளி விற்கப்பட்டது. ஒன்றாம் தேதி மார்க்கெட் விடுமுறை

என்பதால், 31ம் தேதியே அதன் விலை அதிகரித்தது. ஒரு கிலோ, 16 ரூபாய் வரை விற்கப்பட்டது. நேற்று மேலும் விலை உயர்ந்து, கிலோ, 24 முதல், 30 ரூபாய் வரை நேரம் மற்றும் கிராக்கிக்கு தகுந்தவாறு விற்கப்பட்டது. தினசரி மார்க்கெட்டிலேயே, 22 முதல், 24 ரூபாய் வரை விற்கப்படுகிறது. ஈரோட்டை சேர்ந்த தக்காளி வியாபாரி மதன் கூறியதாவது: வெயிலின் தாக்கத்தால், செடிகள் காய்ந்து கருகியுள்ளன. வழக்கமாக தாளவாடி, ஓசூர் உள்ளிட்ட பகுதியில் இருந்து, தக்காளி வரும். ஆனால் கடும் வெயிலால் வரத்து குறைந்துள்ளது. கோவில் விழா, தேர்தல் களம் காரணமாக சாப்பாட்டுக்கு, அதிகளவில் தக்காளியை வாங்கி செல்கின்றனர். வரத்து குறைந்த நிலையில், தேவை அதிகரித்து இருப்பதே விலை உயர்வுக்கு காரணம்.

### நிலக்கடலை விலை அதிகரிப்பு

**அவிநாசி** : சேவூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நடந்த நிலக்கடலை ஏலத்துக்கு, 550 மூட்டை வரத்தாக இருந்தது. இது, கடந்த வாரத்தை விட 150 மூட்டை அதிகம். வரத்து அதிகரித்ததோடு, அனைத்து ரகங்களும் குவிண்டாலுக்கு ரூ.100 முதல் 170 வரை அதிக விலைக்கு ஏலம் போனது. நிலக்கடலை (காய்ந்தது) முதல் ரகம் ரூ.3,480 முதல் 3,660 வரை, இரண்டாம் ரகம் ரூ.3,210 முதல் 3,370 வரை விலைக்கு போனது. ரூ.6.30 லட்சத்துக்கு வர்த்தகம் நடந்தது.

### வறட்சியால் விளைச்சல் பாதிப்பு; கொய்யா விலை உயர்வு

**பழநி** : போதிய மழையில்லாமல், வறட்சி காரணமாக, கொய்யா விளைச்சல் குறைவால், ஆயக்குடி சந்தையில் விலை உயர்ந்துள்ளது.பழநி, ஆயக்குடி, கோம்பைபட்டி, கணக்கன்பட்டி, அமரப்பூண்டி, உள்ளிட்ட பகுதிகளில் ஆண்டுமுழுவதும் கொய்யா விளைவிக்கப்படுகிறது. இவை ஆயக்குடி சந்தை மூலம், வெளி மாநிலம், வெளிநாட்டிற்கு அனுப்பப்படுகிறது. தற்போது, போதிய மழையில்லாமல், மேற்கண்ட பகுதிகளில் வறட்சிநிலவுவதால், கொய்யாவிளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. ஆயக்குடி சந்தையில் கடந்த மாதம் கிலோ ரூ.40 க்குவிற்பனையான கொய்யாபழம், தற்போது விலை உயர்ந்து, ரூ.50 முதல் 60 வரை, தரத்திற்கு ஏற்ப விற்பனை செய்யப்படுகிறது. விவசாயி செல்வம்

கூறியதாவது: இந்த ஆண்டு வறட்சி காரணமாக தண்ணீர் இல்லை. கொய்யா விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. தற்போது பனாரஸ், லக்னோ-49,(சீனிக்கொய்யாய்) போன்றவை விளைவிக்கப்படுகிறது. சந்தையில் கூடுதல் விலைக்கு விற்பனையானலும், விளைச்சல் இல்லாததால் விவசாயிகள் கவலையில் உள்ளனர்,' என்றார்.

## பயிர் இழப்பீட்டு திட்டத்தில் விவசாயிகளை சேர்க்க நடவடிக்கை

**தேனி** : பயிர் இழப்பீட்டு திட்டத்தில், விவசாயிகளை சேர்த்து, அவர்களுக்கு இழப்பீட்டு தொகை பெற்றுத்தர, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தேனி மாவட்டத்தில், இப்கோ- டோக்கியோ என்ற கூட்டுறவு நிறுவனம் மூலம், பயிர் இழப்பீட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் விவசாயிகள் 15 ரூபாய் மட்டும், பிரிமியம் செலுத்தினால் போதும். ஓராண்டுக்கு 50 ஆயிரம் ரூபாய்க்கான இழப்பீடு கிடைக்கும். பயிர் எவ்வளவு சேதமாகிறதோ அதற்கேற்ப இழப்பீடு கிடைக்கும். விவசாயி விபத்தில் இறந்தால், 50 ஆயிரம் ரூபாயும், ஊனமுற்றால் 25 ஆயிரமும் இழப்பீடாக வழங்கப்படுகிறது. இப்கோ- டோக்கியோ கூட்டுறவு நிறுவனம் மூலம், வானிலை சார்ந்த இன்ஸ்சூரன்ஸ் திட்டமும் செயல்படுத்தப்பட உள்ளது. போடி, பெரியகுளம் ஒன்றியங்களில் மட்டும், சோதனை முறையில் செயல்படுத்தப்பட்டுள்ள இத்திட்டம், விரைவில் மாவட்டம் முழுவதும் விரிவாக்கம் செய்யப்பட உள்ளதாக, விவசாயத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

தினகரன்

### இன்றைய வேளாண் செய்திகள்

## வெயிலால் ஏற்படும் பாதிப்புகளை தடுக்க கால்நடைகளை மரத்தடி நிழல், கொட்டகையில் கட்ட வேண்டும் அதிகாரி ஆலோசனை

**வேலூர்**, :தமிழகம்முழுவதிலும் தற்போது கோடைக்காலம் தொடங்கிவிட்டது. இதில் அதிகபட்சமாக 105 டிகிரி வரை வெயில் சுட்டெரிக்கிறது. வெயிலின்

தாக்கத்தால் தாவரங்கள், மரம், செடி, கொடிகள் உள்ளிட்டவை வதங்கி, அதிலுள்ள இலைகள் உதிர்ந்து, பட்டுப்போய்விடும்.

பருவமழை இந்த ஆண்டு பொய்த்து போனதால் விவசாயம் பாதிக்கப்பட்டதோடு, காடு, மலைப்பகுதிகள் தண்ணீரின்றி வறண்டு காணப்படுகிறது. பெரும்பாலான பகுதிகளில் குடிநீர் பிரச்சனை நிலவிவருகிறது. கால்நடைகளுக்கும் தீவனம் கிடைக்காத அவல நிலையும் ஏற்பட்டுள்ளது.

வேலூர் மாவட்டத்தில் தற்போது அதிகபட்சமாக 104 டிகிரி வரை வெயில் சுட்டெரித்து வருகிறது. இதனால் அதிகளவு கால்நடைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இதன் விளைவாக பாலின் உற்பத்தி அளவு பாதியாக குறைந்துள்ளதோடு பால், தயிர், மோர் உள்ளிட்டவைகளுக்கும் தட்டுபாடு ஏற்பட்டுள்ளது.

கோடை வெயிலின் தாக்கத்தில் இருந்து மாடுகளை பாதுகாப்பது குறித்து கால்நடைத்துறை வேலூர் மண்டல இணை இயக்குனர் கமலநாதன் கூறியதாவது: வெயில் காலங்களில் கால்நடைகளுக்கு ஏராளமான பாதிப்புகள் உண்டாகும். இதில் கால்நடைகளுக்கு மூச்சிரைப்பு, காய்ச்சல், மந்தநிலை, வாயில் நீர் ஒழுகுதல், வாயில் நுரை தள்ளுதல், மயக்கம், பருமன் குறைதல், மாடுகளின் பாலின் அளவு குறைதல், உடல் வெப்பநிலை அதிகரித்து தள்ளாடுதல், உடல்நிலை பலவீனமாகி இறந்து விடுதல் உள்ளிட்ட பிரச்னைகள் ஏற்படும்.

இதனை தவிர்க்க மதிய நேரத்தில் மாடுகள் மீது குளிர்ந்த நீரை தெளிக்க வேண்டும். வெயில் நேரத்தில் மரத்தடி நிழல், கொட்டகைகள் மற்றும் வெயில் இல்லாத இடத்தில் கட்டி வைக்க வேண்டும்.

காலை 6 மணி முதல் 11 மணி வரையிலும், மாலை 4 மணி முதல் 6 மணி வரையிலும் மேய்ச்சலுக்காக கூட்டிச் செல்லவேண்டும். மாடுகளின் உரிமையாளர்கள் வசதிப்படைத்தவர்களாக இருந்தால், அவைகளுக்கு குளுகோஸ், பழங்கள் உள்ளிட்டவைகளை கொடுக்கலாம். இந்த வழிமுறைகளை பின்பற்றினால் வெயில் காலத்தில் கால்நடைகளுக்கு ஏற்படும் பாதிப்புகளை குறைக்கலாம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**மானிய விலையில் வைக்கோல் விற்பனை**

**ஸ்ரீமுஷ்ணம்**, : ஸ்ரீமுஷ்ணம் கால்நடை மருத்துவமனையில் கால்நடை வைத்திருக்கும் விவசாயிகளுக்கு மானிய விலையில் உலர் தீவனம் (வைக்கோல்) வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. சிதம்பரம் கால்நடை உதவி இயக்குநர் சதாசிவம் கலந்து கொண்டு, மானிய விலையில் வைக்கோல் வழங்கி பேசுகையில்: மானிய விலையில் உலர் தீவனம் பெற விரும்புபவர்கள் குடும்ப அட்டை மற்றும் வாக்காளர் அடையாள அட்டையுடன் ஸ்ரீமுஷ்ணம் கால்நடை மருந்தகத்தில் பதிவு செய்து பயன் பெறுமாறு அறிவுறுத்தினார். நிகழ்ச்சியில் ஸ்ரீமுஷ்ணம் கால்நடை உதவி மருத்துவர் கணேசன், குடோன் (பொறுப்பு) கால்நடை உதவி மருத்துவர் கோமகன், கால்நடை ஆய்வாளர் வேல்முருகன், பராமரிப்பு உதவியாளர் சாமியப்பன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**கேழ்வரகு பயிரிடுவதில்விவசாயிகள் ஆர்வம்**

**சங்கராபுரம்,**: சங்கராபுரம் அதிக விளை நிலங்கள் கொண்ட பகுதியாக உள்ளது. இந்தப்பகுதியில் மாற்றுப்பயிராக கேழ்வரகை பயிரிட்டு வருகின்றனர். இதற்கு அதிக தண்ணீர் தேவையில்லை என்பதாலும் கோடையை தாக்கு பிடிக்கும் என்பதால் கேழ்வரகு பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர். ஒரு ஏக்கர் பயிரிட 5 கிலோ விதை கேழ்வரகு போதுமானதாகும். வாரத்துக்கு ஒரு முறை நீர் பாய்ச்சினால் போதுமானது. அறுவடைக்குள் மூன்று முறை களை எடுக்க வேண்டும். இது நான்கு மாத குறுகிய கால பயிர் என்பதால் விவசாயிகள் கேழ்வரகை ஆர்வத்துடன் பயிரிடுகின்றனர். 100 கிலோ ரூ.3 ஆயிரம் முதல் 5 ஆயிரம் வரை விலை போகிறது. மருத்துவ குணம் கொண்டதால். எப்போதும் விலை குறையாமல் விற்கப்படுகிறது. இதனால் இப்பகுதி விவசாயிகள் கேழ்வரகை அதிகளவில் பயிரிட்டு வருகின்றனர்.

**வேளாண் பல்கலைக்கழகத்தில் உணவுப்பொருள் தயாரிக்கும் பயிற்சி**

**கோவை**, : தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் சிறு தானியங்களில்

இருந்து மதிப்பூட்டப்பட்ட உணவுப்பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி வரும் 7ம் தேதி மற்றும் 8ம் தேதி நடக்கிறது.

இதில், பாரம்பரிய உணவுகள், பிழிதல், அடுமனைப்பொருட்கள், உடனடி தயார்நிலை உணவுகள் செய்ய பயிற்சியளிக்கப்படுகிறது.

இப்பயிற்சியில் சேர விருப்பம் உள்ளவர்கள் ரூ.1000 செலுத்தி பெயரை முன்பதிவு செய்து கொள்ளலாம்.

நேரில் வந்து பெயரை பதிவு செய்து கொள்ள இயலாதவர்கள் பயிற்சி கட்டண தொகையை வரைவோலை மூலம் பேராசிரியர் மற்றும் தலைவர், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோவை என்ற பெயரில் கோவையில் உள்ள பாரத ஸ்டேட் வங்கியில் பெறத்தக்க வகையில் எடுத்து பேராசிரியர் மற்றும் தலைவர், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோவை -641-003 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். பதிவு செய்ய இறுதி நாள் 7ம் தேதியாகும். இத்தகவலை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

**பெரியாறு அணையில் நீர்மட்டம் குறைகிறது**

**கூடலூர்**, : பெரியாறு அணையின் நீர்பிடிப்பு பகுதிகளில் மழை இல்லாததால் அணையின் நீர்மட்டம் குறைந்து வருகிறது.

மொத்தம் 152 அடி உயரமுள்ள பெரியாறு அணையின் நீர்மட்டம், நேற்று காலை நிலவரப்படி 110.30 அடியாக இருந்தது. அணைக்கு நீர்வரத்து 100 கன அடியாக இருந்தது. அணையிலிருந்து நீர் வெளியேற்றம் வினாடிக்கு 100 கன அடியாகவும், அணையின் இருப்புநீர் 959 மில்லியன் கன அடியாகவும் உள்ளது. 71 அடி உயரமுள்ள வைகையின் நீர்மட்டம் 29.09 அடியாக உள்ளது. அணைக்கு நீர்வரத்து இல்லை. அணையிலிருந்து வினாடிக்கு 40 கனஅடி நீர் வெளியேற்றப்படுகிறது. அணையின் இருப்புநீர் 333 மில்லியன் கனஅடியாக உள்ளது. 57 அடி உயரமுள்ள மஞ்சளாறு அணையின் நீர்மட்டம் நேற்று 33.30 அடியாக இருந்தது. அணைக்கு நீர்வரத்து இல்லை. அணையிலிருந்து நீர் வெளியேற்றம்

வினாடிக்கு 8 கன அடியாகவும், அணையின் இருப்புநீர் 107.88 மில்லியன் கனஅடியாக உள்ளது.

126 அடி உயரமுள்ள சோத்துப்பாறை அணையின் நீர்மட்டம் 72.98 அடியாக இருந்தது. அணைக்கு நீர்வரத்து இல்லை. அணையிலிருந்து வினாடிக்கு 3 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. அணையின் இருப்பு நீர் 32.64 மில்லியன் கனஅடியாக உள்ளது.

கடந்த ஆண்டு இதே நாளில் பெரியாறு அணை நீர்மட்டம் 113 அடியாகவும், நீர்வரத்து வினாடிக்கு 70 கனஅடியாகவும் இருந்தது. நீர் வெளியேற்றம் வினாடிக்கு 100 கனஅடியாகவும், அணை இருப்பு நீர் 1,392 மில்லியன் கன அடியாகவும் இருந்தது.

**பப்பாளி விளைச்சல் அமோகம்**

**சின்னமனூர்**, : சின்னமனூர் பகுதியில் பப்பாளி அதிக விளைச்சல் கண்டுள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

சின்னமனூரில் சுமார் 4 ஆயிரம் ஏக்கரில் இருபோகம் நெல்சாகுபடி நடைபெறும். சின்னமனூரை சுற்றியுள்ள கிராமங்களில் வாழை, திராட்சை, தென்னை மற்றும் அனைத்து வகையான காய்கறிகள் விளைவிக்கப்படுகிறது. பல விவசாயிகள் பப்பாளி சாகுபடி செய்து வருகின்றனர். ஹைபிரிட் வகை பப்பாளி ரகங்களை ஏக்கருக்கு 1,200 கன்றுகளை நடவு செய்கின்றனர்.

8 முதல் 10 மாதத்திற்குள் மகசூல் கிடைக்க துவங்கும். மருந்து, உரம், களையெடுப்பு என ஏக்கருக்கு 25 முதல் 30 ஆயிரம் ரூயாப் வரை செலவு செய்கின்றனர். தற்போது கிணற்று பாசனத்தில் பப்பாளி வளர்ந்து காய்கள் பறிப்புக்கு தயார் நிலையில் வைத்துள்ளனர். இந்த சீசனில் பப்பாளி நல்ல விளைச்சல் கண்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். இப்பகுதியில் பறிக்கப்படும் பப்பாளிகள், மொத்தமாக ஏலச்சந்தைக்கு கொண்டு வந்து விற்பனை செய்யப்படுகிறது. இதை பெரும்பாலும் கேரள வியாபாரிகள் கொள்முதல் செய்கின்றனர்.

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

## இன்றைய வேளாண் செய்திகள்

### மூங்கில்துறைப்பட்டு பகுதிகளில் சாமந்திப்பூ சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம்



**மூங்கில்துறைப்பட்டு,**

மூங்கில்துறைப்பட்டு பகுதிகளில் சாமந்தி பூ சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர்.

<u>சாமந்தி பூ</u>

மூங்கில்துறைப்பட்டு பகுதிகளில் நெல், கரும்பு, மக்காச்சோளம் ஆகியவை அதிகளவு பயிர் செய்யப்படு கிறது. தற்போது தண்ணீர் பிரச்சினை ஏற்பட்டுள்ளதால் மாற்று பயிராக சாமந்தி, கோழிக்கொண்டை, சம்மங்கி ஆகிய பூக்கள் அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது.

குறிப்பாக பழையூர், இளையாங் கண்ணி பகுதியில் சாமந்தி பூ அதிகளவில் விளைந்துள்ளது.

இந்த பூக்கள் மஞ்சள் நிறத்தில் பூத்து குலுங்குகிறது. இங்கு உற்பத்தி யாகும் பூக்கள் கள்ளக்குறிச்சி, சங்கராபுரம், திருவண்ணா மலை பகுதி பூக்கடைகளுக்கு விற்பனைக்கு செல்கிறது.

**<u>நல்ல வருமானம்</u>**

தற்போது முகூர்த்த நாட்கள், கோவில் திருவிழாக்கள் நடப்பதால் ஒரு கிலோ ரூ.50 முதல் ரூ.100 வரை விற்பனை யாகிறது. இதனால் செலவை விட நல்ல வருமானம் கிடைப்பதாக விவசாயிகள் கூறுகின்றனர்.